**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 61** **நாள் : 25.03.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் நிறுமவரி செலுத்துவதற்காகவும், தொழில் உரிமம் புதுப்பிப்பதற்காகவும் மார்ச் 29, 30 மற்றும் 31 ஆகிய விடுமுறை நாட்களில் வருவாய்த்துறை இயங்கும்.**

நடப்பு நிதியாண்டு 31.03.2025 அன்று முடிவடைவதன் காரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி சொத்துவரி, தொழில்வரி மற்றும் நிறுமவரி செலுத்துவதற்காகவும், தொழில் உரிமம் புதுப்பிப்பதற்காகவும், பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை வரும் 29.03.2025, 30.03.2025 மற்றும் 31.03.2025 ஆகிய விடுமுறை நாட்களிலும் இயங்கும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**